# குளித்தலை நகராட்சி

30.09.2020.ஆம் தேதி புதன்கிழமை காலை 10.45 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ம.முத்துக்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்–01. அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் 02.09.2020 தேதியிட்ட அரசாணை(டி) எண்.298இல் கொரோனா நோய் பரவிய காரணத்தினால் தமிழக அரசு முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட 01.04.2020 முதல் 31.05.2020 முடிய உள்ள காலத்திற்கு நகராட்சிக்கு சொந்தமான வருமானங்கள் வரதக்க இனங்களான ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் கடை கட்டிடங்கள் மூலம் வரும் வாடகை மற்றும் ஆண்டு குத்தகை இனங்கள் மூலம் வரக்கூடிய வருமானத்தை தள்ளுபடி செய்து உத்தரவிட்டு வெளியிடப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1291/2020/அ1)

பொருள்–02. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.ம.முத்துக்குமார், அவர்களின் ஆகஸ்ட்–2020ஆம் மாதம் (24.08.2020 முதல் 31.08.2020 வரை) மற்றும் செப்டம்பர்–2020ஆம் மாதம் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–03. குளித்தலை நகராட்சி பொறியாளர் திரு.ரா.ராதா அவர்களின் ஆகஸ்ட்–2020ஆம் மாதம் (20.08.2020 முதல் 31.08.2020 வரை) மற்றும் செப்டம்பர்–2020ஆம் மாதம் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–04. குளித்தலை நகராட்சிப் பகுதியில் ஜெய்மஹால் அவென்யூ பூங்கா இடத்தில் உள்ள நுண் உரக்கிடங்கில் கூடுதல் பணி தொடர்பான பணிக்கு, ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.65, நாள்–14.09.2020 அனுமதி பெற்று 24.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சியில் பெரியார்நகர் ஜெய்மஹால் அவென்யூ பூங்காவில் உள்ள நுண்உரக்கிடங்கில் கூடுதல் பணி குடிநீர் பணி மற்றும் மின்சாதன பொருட்களை பொருத்துதல் பணி செய்தல் | M.செந்தில்குமார், பெரியார்நகர், குளித்தலை. | 0.5% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | R.N.வெங்கடாஜலபதி, குளித்தலை. | 1.05% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டைவிட 0.5% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.M.செந்தில்குமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகையை 2020–21ம் ஆண்டு நிதி நிலை செலவினத்தில் மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.1164/2020/இ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சிப் பகுதியில் ஆணையர் குடியிருப்பில் பொறியாளருக்கு அறை கட்டித்தருவது தொடர்பான பணிக்கு, ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.54, நாள்–31.08.2020 அனுமதி பெற்று 16.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி ஆணையர் குடியிருப்பு பின்புறம் நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு குடியிருப்பு கட்டுதல். | M.செந்தில்குமார், பெரியார்நகர், குளித்தலை. | 0.30% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | R.N.வெங்கடாஜலபதி, குளித்தலை. | 6.84% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டைவிட 0.30% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.M.செந்தில்குமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகையை 2020–21ம் ஆண்டு நிதி நிலை செலவினத்தில் மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.1106/2020/இ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சி எல்கைக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் உள்ள வீடுகளுக்கு ஒரே சீரான குடிநீர் வழங்க வேண்டும் என்று அரசு கொள்கை முடிவு எடுக்கப்பட்டு செயல்படுத்த கூருகுஜனுஊடீ நிறுவனம்மூலம் வட்டி இல்லா கடனாக இந்நகராட்சிக்கு 5500 எண்ணங்கள் கொண்ட குடிநீர் இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்பட்டு, ரூ.192.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ந.க.எண்.13277/2018/னுடீ, நாள்–06.12.2018இல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் வீடுகளுக்கு வழங்கப்படும் இணைப்பிற்கான தொகை விபரம்

| வ. எண். | கட்டண விவரம் | தார்சாலை | | சிமெண்ட் சாலை | |
|---|---|---|---|---|---|
| 1) | விண்ணப்பம் மற்றும் பதிவு கட்டணம் | ரூ. | 150.00 | ரூ. | 150.00 |
| 2) | வைப்புத் தொகை (வீடு) | ரூ. | 4000.00 | ரூ. | 4000.00 |
| | வைப்புத் தொகை (வீடல்லாத) | ரூ. | 8000.00 | ரூ. | 8000.00 |
| 3) | சாலை பராமரிப்பு | ரூ. | 3666.00 | ரூ. | 4234.00 |
| 4) | மேற்பார்வை கட்டணம் | ரூ. | 1315.00 | ரூ. | 1368.00 |
| | | | | | |
| | **மொத்தம் வீடு** | **ரூ.** | **9131.00** | **ரூ.** | **9752.00** |
| | **மொத்தம் வீடற்ற** | **ரூ.** | **13131.00** | **ரூ.** | **13752.00** |

மேலே கண்டுள்ள பட்டியலின்படியும், அனைத்து குடியிருப்பு மற்றும் வணிகப் பயன்பாட்டில் உள்ள கட்டிடங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு 0.00 மீட்டர் முதல் 30.00 மீட்டர் வரை சாலைக்கு கட்டண விவரம்.

| | தார் சாலை (ரூ.) | சிமெண்ட் சாலை (ரூ.) | குடியிருப்பு அல்லாதது – தார்சாலை (ரூ.) | குடியிருப்பு அல்லாதது – சிமெண்ட் சாலை (ரூ.) |
|---|---|---|---|---|
| தார்சாலை கட்ட வேண்டியது | 9131.00 | 9752.00 | 13131.00 | 13752.00 |
| ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ளது | 3460.00 | 3195.00 | 3460.00 | 3195.00 |
| GST 12% | 416.00 | 384.00 | 416.00 | 384.00 |
| **மொத்தம்** | **13007.00** | **13331.00** | **17007.00** | **17331.00** |
| **தவணை 1க்கு** | **1301.00** | **1333.00** | **1701.00** | **1733.00** |

மேலே கண்டுள்ள விவரப்படி குடியிருப்பு, குடியிருப்பு அல்லாத வீடுகளுக்கும், தார்சாலை மற்றும் கான்கிரீட் சாலை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக அளவீடு செய்து 10 தவணைக்கு தயார் செய்து ஒரு தவணைக்கு செலுத்தவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டண விவரம் கணினியில் 07.05.2019இல் பதிவேற்றம் செய்யப்பட்டு, பொதுமக்களிடம் வசூல் செய்யப்பட்டு வருவதை நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2884/2017/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொரோனா (Covid-19) வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நோய் தொற்று பரவாமல் தடுக்கவும், மக்களின் பொது சுகாதார நலன் கருதியும் Herbal முறையில் தயார் செய்யப்பட்ட அடர்த்திமிகு ECO Clean-DC கிருமி நாசினி சப்ளை செய்வதற்கு நாள்–24.09.2020இல் விலைப்புள்ளி கோரியதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | GST, SGST இல்லாமல் 1 லிட்டர் விலை ரூ. |
|---|---|---|
| 1) | SHRI VARI TRADERS,<br>376/4, Thiruvika Street, Erode – 638 011. | 5050.00 |
| 2) | Sathyam Agencies,<br>19/C,Mukil Complex, Sathy road, Erode – 638 003. | 5150.00 |
| 3) | CLASSIC PLAST, 191B,Bharathiyar road, Ganapathynagar, Coimbatore – 641 006 | 4800.00 |

அலுவலக குறிப்பு– 1). குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள CLASSIC PLAST, Coimbatore நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.463/2020/எச்1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சிப் பகுதியில் நாப்பாளையம் மற்றும் பெரியார்நகர் நீரேற்றும் நிலையத்தில் (குளோரினேசன்) மோட்டார் அமைக்கும் பணிக்கு, ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.56, நாள்–31.08.2020 அனுமதி பெற்று 15.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சியில் பெரியார்நகர் மற்றும் நாப்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் கூடுதல் திரவ குளோரினேசன் இயந்திரம் பொருத்துதல். | M/s.M.R.DYES and Chemicals,<br>No.25,RKV Nagar, Erode. | 1.09% மதிப்பீட்டைவிட மிககுறைவு |
| | | M/s.Rakshika Chemicals and Traders,<br>No.169,SriKrishna, Erode. | 0.80% மதிப்பீட்டைவிட குறைவு |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 1.09% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.M.R.DYES and Chemicals ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.1098/2020/இ1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சிமூலம் செயல்படுத்தப்பட்டுவரும் அரசு திட்டங்கள் பற்றிய விளம்பரம், தஞ்சை மற்றும் திருச்சி பதிவு மாலைமுரசு மற்றும் தினத்தந்தி நாளிதழ் வெளியிடும் தொழில்மலர் 2020இல் அரசு விளம்பரம் வெளியிட மாவட்ட ஆட்சியர், கரூர் அவர்களின் ந.க.எண்.213/செ.ம.தொ.அ./2020, நாள்–21.09.2020 இணங்க, மாலை முரசு மற்றும் தினத்தந்தி நாளிதழ் தொழில்மலரில் நகராட்சிமூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை முழுப்பக்கம் வெளியிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.32000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1260/2020/இ1)

பொருள்– 10. இந்நகராட்சி பணியாளர்களின் ஊதியப்பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதி சந்தா தொகை மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட பிடித்தம் மற்றும் நிர்வாக பங்குத் தொகை சேமநல நிதி கணக்கு மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட தலைப்பில் செலுத்தப்படாமல் தனிநபர்களுக்கு ரொக்கமாக வழங்கியது 2019–2020ஆம் ஆண்டு தணிக்கையில் கண்டறியப்பட்டு மேற்படி தொகை கையாடல் தொடர்பாக, மாவட்ட குற்றப்பிரிவில் புகார் அளிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி கையாடல் தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட ஆணையர், நகராட்சி பொறியாளர், கணக்கர் இளநிலை உதவியாளர் மற்றும் வருவாய் உதவியாளர் ஆகியோர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.10053/2020/சி1–1, நாள்–30.07.2020இல் தற்காலிக பணி நீக்கம் செய்து உத்தரவிடப்பட்டது.

மேற்படி பணியிடை நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து இடைக்காலத் தடை கோரி, திருமதி.ந.யசோதாதேவி, இளநிலை உதவியாளர் மற்றும் திரு.கி.சரவணன், வருவாய் உதவியாளர், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் (வழக்கு எண்.W.P.(MD)No.13016/2020 மற்றும் வழக்கு எண்.W.P.(MD)No.13193/2020) வழக்கு தொடர்ந்துள்ளார்கள்.

மேற்படி வழக்கினை எதிர்த்து நகராட்சி சார்பில், நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.லார்டு பவுல் மௌரியா அவர்களிடம் வழக்கினை ஒப்படைத்து எதிர் வழக்காடவும், அதற்கான செலவினம் ரூ.30,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.941/2020/சி1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ப.ராமமூர்த்தி, ஊக்க ஊதிய உயர்வு (Bonus Increment) கோரி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்துள்ள WP(MD)No.8919/2020 வழக்கில், நகராட்சி சார்பாக திரு.லூர்து பௌல் மௌரியா, பி.ஏ., பி.எல்.,(ஹானர்ஸ்) எம்.எல்., நகராட்சி வழக்கறிஞர் வழக்காடு கட்டணம் ரூ.15,000/– வழங்கக்கோரி, 22.09.2020இல் கோரியுள்ளார். மேற்படி தொகை ரூ.15,000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1606/2017/சி1)

பொருள்– 12. உலகையே உலுக்கிவரும் கொரோனா நோய் பரவிவருகிற சூழ்நிலையில் தற்போது நேர்முகமான ஆய்வுக்கூட்டங்கள் நடைபெறாமல், அரசு செயலர், நகராட்சி நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சிகளின் மண்டல இயக்குநர் வீடியோ கான்பிரன்ஸ் மூலம் ஆய்வு கூட்டங்கள் நடத்தி வருவதால் தற்போது இந்நகராட்சியில் வெப்கேமராவுடன் கூடிய ஸ்பீக்கர் பயன்பாட்டுடன்கூடிய கணினி இல்லாத காரணத்தினால், தற்போது Tharamani Women Stationery Printing Education Materials and Allied Products Industrial Co-operative Society Ltd., Chennai, கீழ்க்கண்ட விபரப்படி கணனிகள் விநியோகம் செய்ய 24.09.2020இல் விலைப்புள்ளி கொடுத்துள்ளார்.

| | |
|---|---|
| 1. | HP All in One Model No.22DF0142IN- 10th gen 15, 8GB RAM,1TB HARDDISK, Monitor 19.5" with wireless keyboard and Mouse, Win 10+MS Office 3 years Warranty 1 No. |
| 2. | HP Model NO.0307IN Core i5 9th , 4GB RAM, 1TB HARDDISK, Monitor 19.5" with wireless keyboard and Mouse, Win 10+MS Office 3 Years Warranty 1 No. |

மேற்கண்ட இரண்டு கணினிகளின் மதிப்பு ரூ.1,50,000/–க்கு மேற்படி கணனி நகராட்சி பயன்பாட்டுக்கு வாங்கிக்கொள்ள கூட்டுறவு நிறுவனத்திடம் நேரடியாக கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1571/2019/இ1)

| | |
|---|---|
| பொருள்– 13. | குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான அலுவலக வளாகத்தில் அமர்ந்து பணி செய்வதற்குரிய கட்டுமானங்கள் இல்லாததால், அனைத்து கட்டுமானங்களையும் மராமத்துப் பணிகள் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிகளில் மின் பணிகள் வகைபாட்டில் இல்லாததால், பணி செய்யும்போது மின் இணைப்புகள் பழுதடைந்து அனைத்தும் மாற்றம் செய்வது மிகவும் அவசியமாகிறது. மேலும், ஆணையர் அறையில் புதியதாக கைகழுவும் கோப்பை, கழிப்பிடம் கோப்பை மற்றும் இதரப்பணிகள் செய்தவகையில் விட்டுப்போனதால் மேற்கண்ட பணி மிகவும் முக்கியமானதாக இருப்பதாலும், மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி, பணியினை செய்வதற்கு மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு தயார் செய்து செலவினத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு– | 1). அனுமதிக்கலாம்.<br>2). மேற்படி செலவினத்தை 2020–2021 ஆண்டு நிதி நிலையில் செய்ய அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1365/2020/இ1) |

*******

# குளித்தலை நகராட்சி

30.09.2020.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 66 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 67 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 68 | பதிவு செய்யப்பட்டது. |
| 4 | 4 | 69 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 5 | 5 | 70 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 6 | 6 | 71 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 72 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 8 | 8 | 73 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 9 | 9 | 74 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 75 | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 76 | அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 12 | 77 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 78 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–ம.முத்துக்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.